
# திராவிடத்தால் வாழ்கிறோம்

981

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

141



# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்! – விரிவாக்கம்

## தமிழ்நாடு அரசின் சமூகநீதி முதலீடு!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.**

என்கிறது வான்புகழ் வள்ளுவம். “ஒரு நாடு செழிப்பாக இருக்கவும், மக்கள் வாழ்வில் துன்பம் நேராமல் இருக்கவும், பசி, நோய், பகை ஆகிய மூன்றுக்கும் இடமளிக்காமல் ஆட்சி செய்ய வேண்டும்”என்று விளக்கம் அளிக்கிறது கலைஞர் உரை.

பகையாக, ஆரியத்துக்கு எதிராக சமர் செய்துகொண்டே, பசி, நோய் ஆகியவற்றுக்கு இடமளிக்காத வகையில் ஆட்சி செய்தது, செய்து கொண்டிருக்கிறது திராவிடம். அந்த வகையில், திராவிட மாடல் அரசு செயல்படுத்திய மிகச் சிறப்பான சமூகநீதி திட்டங்களில் ஒன்று பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம். 2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், படிப்படியாக ‘விரிவாக்கம்’ செய்யப்பட்டுள்ளது. இது எந்த மாநில அரசும் நிகழ்த்த முடியாத சாதனை எனலாம். இதன்மூலம், உலக நாடுகளுக்கு முன்னோடி எனப் பெருமை கொள்கிறது தமிழ்நாடு.

நீதிக்கட்சியின் நிர்வாகத்தில், பள்ளியில் மதிய உணவு வழங்குவதற்காக சென்னை மாநகராட்சி மன்றத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் 16.09.1920. அதன் 102 ஆம் ஆண்டு நிறைவடைந்த நாளில், 15.09.2022 அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில், மதுரை ஆதிமூலம் மாநகராட்சிப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை தொடங்கிவைத்தார் மாண்புமிகு முதலைமைச்சர்.

இந்தத் திட்டத்தின் நோக்கம், மாணவர்கள் பசியுடன் பள்ளிக்கு வரக்கூடாது என்பதுதான். மதிய உணவு நேரம் வரை அவர்கள் சத்துணவுக்காக காத்திருக்காமல், காலையிலேயே சத்தான உணவைச் சாப்பிட்டு, பாடங்களைக் கற்று, மதியம் மீண்டும் சத்துணவு சாப்பிடச் செல்ல வேண்டும். இதன் மூலம், ஊட்டச்சத்துக் குறைபாடின்றி அவர்கள் ஆரோக்கியமாக வளரவும், வருகை தடைபடாமல் இருக்கவும் செய்வதுடன், அந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைப்பதும் காலை உணவுத் திட்டத்தின் குறிக்கோளாக அமைந்தன.

முதற்கட்டமாக 38 மாவட்டங்களில் 1,545 தொடக்கப் பள்ளிகளில் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 95 குழந்தைகள் பயன்பெறும் வகையில், ரூபாய் 33.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டது. அடுத்த கட்டமாக, 2023-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் திட்டம் நீடிக்கப்பட்டு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயலியின்படி, 1,005 நகர்ப்புற மையங்களில் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 883 குழந்தைகளுக்கும், 963 கிராமப்புற மையங்களில் 41 ஆயிரத்து 225 குழந்தைகளுக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.



### திருக்குவளையில்...

அதன்பின்னர், 2023 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 25 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில் அவர் படித்த தொடக்கப்பள்ளியில் இருந்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்தார் முதலமைச்சர்.

இவ்வாறு செயல்படுத்தப்பட்ட மிகச் சிறப்பான, இந்தத் திட்டம் குறித்த ஆய்வறிக்கைகள் எல்லாம் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகை அதிகரித்திருப்பதையும், குழந்தைகளின் கற்றல் திறன் மேம்பாடு அடைந்து, நினைவாற்றலும் மேம்பாடு அடைந்திருப்பதையும் உறுதி செய்தன.

> ஆண்டுக்கு 600 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் மகத்தான சாதனையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

இந்தத் தரவுகளின்படி, இத்திட்டத்தினை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யலாம் என திட்டமிட்டது நம் அரசு. அதனைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் தேதி, ஊரகப் பகுதிகளில் உள்ள 3 ஆயிரத்து 995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் இருந்து, இதைத் தொடங்கி வைத்தார் முதலமைச்சர். இந்த விரிவாக்கம் மூலம், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 2 லட்சத்து 23 ஆயிரத்து 536 மாணவ மாணவியர் பயன்பெற்றனர்.

**“பஞ்சாப் பின்பற்றும்!”**

2025 செப்டம்பர் 26 ஆம் தேதி நடைபெற்ற, காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தைத் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிக்கு பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் சிங் மான் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். “தமிழ் நாட்டினைப் பின்பற்றி பஞ்சாப் மாநிலத்திலும் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த பரிசீலனை செய்து வருகிறோம்”என அப்போது அவர் குறிப்பிட்டார்.

### 20 லட்சம் குழந்தைகள்

குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி, படிப்புத்திறன் அதிகரித்துள்ளதைக் கண்டறிந்த அரசு, அடுத்த கட்டமாக நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்தது. 2025-26 நிதிநிலை அறிக்கையில் இதுதொடர்பான அறிவிப்பினை வெளியிட்ட முதல்வர், கடந்த செப்டம்பர் மாதம் 26-ஆம் தேதி, சென்னை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், திட்ட விரிவாக்கத்தினைத் தொடங்கி வைத்தார். இந்த விரிவாக்கத்தின் மூலம் நகர்ப்பகுதிகளில் 2 ஆயிரத்து 430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் 3 லட்சத்து 6 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர்.

2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல், கடந்த செப்டம்பர் மாதம் விரிவாக்கம் செய்யப்பட்டது வரை, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் செயல்படுகிற 37 ஆயிரத்து 416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளில் படிக்கின்ற 20 லட்சத்து 59 ஆயிரம் குழந்தைகள் தினமும் காலையில் சூடாக, சுவையாக, சத்தான காலை உணவினை உண்டு கல்வி கற்கின்றனர். ஆண்டுக்கு 600 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் மகத்தான சாதனையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. “இது செலவு அல்ல, சமூகநீதி அரசின் சோசியல் இன்வெஸ்ட்மென்ட்” என்று குறிப்பிட்டார் நம் முதலமைச்சர். அதனால்தான், தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களுக்கு அவர் அப்பா!

...சாதனை தொடரும்

## மேடைப்பேச்சுப் பயிற்சி வகுப்பு!

சுயமரியாதை இயக்கம் உருவான காலம்தொட்டே பேசிப்பேசி, எழுதி எழுதி வளர்ந்த இயக்கம் திராவிட இயக்கம். பெரியாரைப்போல மக்கள்நடையில் பேச்சுவழக்கிலும், அண்ணாவைப்போல அடுக்குமொழி, அலங்கார நடையிலும் பேசும் இரண்டுவிதமான பாணி திராவிட இயக்கப் பேச்சாளர்களுக்கு உண்டு. நடை எதுவானாலும் அதில் உண்மை வேண்டும், உறுதி வேண்டும், சரி எது – தீங்கு எது? நன்மை எது – கெடுதி எது என்று பகுத்தாய்ந்து பார்க்கிற தெளிவும், மக்களுக்குப் புரியவைக்கிற பாங்கும் வேண்டும். அதன் காரணமாகவே திராவிட இயக்க மேடைப்பேச்சுக்கு என்று தனி வரலாறு உண்டு.

அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக, இன்றைய இளம் தலைமுறையும் திராவிட இயக்க மேடைப் பேச்சுக்கலையைக் கற்று வளர, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், மேடைப்பேச்சுப் பயிற்சி வகுப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. திராவிடக் கருத்தியலை ஏற்றுக்கொண்ட, 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்காக நடத்தப்படும் இந்தப் பயிற்சி வகுப்பினை பேராசிரியர் சுப. வீரபாண்டியன் எடுக்கவுள்ளார்.

12.10.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது. முன்பதிவு செய்யும் முதல் 100 பேருக்கு மட்டுமே வாய்ப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது. மேடைப்பேச்சுக் கலையை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோர் முன்பதிவு செய்ய முந்துங்கள்.

தொடர்புக்கு: 78457-20151

முன்பதிவு செய்ய இந்த க்யூ.ஆர். கோட்டினை ஸ்கேன் செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



### காமராசர் விருதுபெற்ற காங்கிரஸ் நண்பர்!



ஏ.ஆர்.எம்.வொய்.ரகுநாத்

எனது தாத்தா ஏ.ஆர்.மாரிமுத்து அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக, நான்கு முறை பொறுப்பு வகித்தவர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவராக இருந்தவர். டாக்டர் கலைஞர் அவர்களின் நெருங்கிய நண்பர். தாத்தா அவர்களின் எளிமையான அரசியல் பணியைப் பாராட்டி, தமிழ்நாடு அரசு 2007-ஆம் ஆண்டு ‘காமராசர் விருது’ வழங்கி கௌரவப்படுத்தியது. இரண்டு மூத்த முன்னோடிகள் இடம் பெற்றுள்ள இந்தப் படம், எங்களின் இதயத்துக்கு நெருக்கமானது.

– ஏ.ஆர்.எம்.வொய்.ரகுநாத்,
பட்டுக்கோட்டை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சனிக்கிழமை அரசு விடுமுறை!

1990-ஆம் ஆண்டு பிப்ரவரி 7 ஆம் தேதி, தமிழ்நாடு அரசின் பல்வேறு சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள் முதலமைச்சர் கலைஞரை சந்தித்து, தங்களின் கோரிக்கைகளை முன்வைத்து விவாதித்தனர். அன்றைய தினமே, தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு, இனி வாரத்தில் 5 நாட்கள்தான் பணி நாட்கள் என்று அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131